**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், புதுக்கோட்டை**

**முன்னிலை . திரு.K.S.பால்பாண்டியன், B.A., B.L.,**
**தலைமை குற்றவியல் நீதிபதி, புதுக்கோட்டை**

**2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 24ம் நாள் புதன்கிழமை**

# அமர்வு வழக்கு எண். 68/2023

(முதல் நிலை பதிவு வழக்கு எண்.13/2023)
(மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆலங்குடி)

| வ.எண். | தலைப்புகள் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | சம்மட்டிவிடுதி காவல் நிலையம்,<br>குற்ற எண்.29/2022 |
| 2. | எதிரிகளின் பெயர் மற்றும் முகவரி | **1. வீரமணி,**<br>த/பெ.ரவிச்சந்திரன்,<br>வீரியாணிப்பட்டி,<br>வாராப்பூர் அஞ்சல்,<br>புதுக்கோட்டை மாவட்டம்.<br>**2. கமலம்,**<br>க/பெ.ரவிச்சந்திரன்,<br>வீரியாணிப்பட்டி,<br>வாராப்பூர் அஞ்சல்,<br>புதுக்கோட்டை மாவட்டம். |
| 3. | சம்பவ தேதி | 23.02.2022 |
| 4. | புகார் அளித்த தேதி | 24.02.2022 |
| 5. | எதிரிகளிடம் | 01.10.2024 |

| | | |
|---|---|---|
| | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வினவப்பட்ட நாள். | |
| 6. | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 22.06.2026 |
| 7. | விசாரணை துவங்கிய நாள் | 05.12.2025 |
| 8. | விசாரணை முடிவுற்ற நாள் | 17.06.2026 |
| 9. | தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட நாள் | 24.06.2026 |
| **வ.எண்.** | **தலைப்புகள்** | **விவரங்கள்** |
| 1. | குற்றமுறையீட்டாளரின் பெயர்: | காவல் ஆய்வாளர்,<br>சம்மட்டிவிடுதி காவல் நிலையம்,<br>குற்ற எண்.29/2022 |
| 2. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்: | 1. வீரமணி,<br><br>2. கமலம், |
| 3. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள்: | எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294பி, 323, 326 மற்றும் 307ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| 4. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் பதில் : | குற்றவாளிகள் அல்ல. |
| 5. | இந்நீதிமன்றத்தின் தீர்மானம்: | முடிவாக, இந்த வழக்கின் எதிரிகளுக்கு எதிராக இ.த.ச.பிரிவுகள் 294பி, 323, 326 மற்றும் 307ன் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என |

| | | |
|---|---|---|
| | | தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சா.பொ.1 சான்றுபொருளை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழித்துவிட உத்தரவிடப்படுகிறது. |
| 6. | தண்டனை அல்லது உத்தரவு | இல்லை. |

இவ்வழக்கானது புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 11.08.2023 தேதியில் இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு 22.06.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் அரசு தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.B.சிவசங்கரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் M.சின்னையா அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும் இன்று வரை என் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆழ்ந்து வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கின் எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294பி, 323, 326 மற்றும் 307ன் கீழ் குற்றம்சாட்டி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட புகார்தாரரான தங்கராசு என்பவருக்கும் எதிரிகளுக்கும் இடையே அவர்கள் வீட்டு முன்பாக இருந்த பாதை பிரச்சினை சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்த நிலையில் 23.02.2022 தேதியில் இரவு சுமார் 09.30 மணியளவில் புகார்தாரர் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு வந்தபோது அவருடைய வீட்டிற்கு எதிரே உள்ள பாதையில் 1வது எதிரி அவருடைய இருசக்கர வாகனத்தை குறுக்காக நிறுத்தியிருந்ததாகவும், அதனால் அவரிடம் சென்று ஏன் வண்டியை பாதையில் நிறுத்தி வைத்துள்ளீர்கள் அதை எடுங்கள் என்று புகார்தாரர் கேட்டபோது இந்த வழக்கின் 2வது எதிரியான கமலம் என்பவர் 'ஏண்டா வண்டியை எடுக்கணும் புண்டமகனே' என்று அசிங்கமாக பேசி புகார்தாரரை கையால் அடித்து கீழே தள்ளிவிட்டதாகவும், கீழே விழுந்த புகார்தாரரை தூக்க வந்த புகார்தாரரின் மனைவியை இதன் 1வது எதிரியான வீரமணி என்பவர் கையில் வைத்திருந்த மண்வெட்டியை கொண்டு புகார்தாரரின் மனைவியான தமிழ்செல்வியை பார்த்து 'எப்ப பார்த்தாலும் உங்களுக்கு இதே வேலையா போச்சு இத்தோடு செத்து ஒழிங்கடி' என்று சொல்லி தலை மற்றும் நெற்றியில் மண்வெட்டியின் பின்புறத்தால் திருப்பி அடித்துவிட்டதாகவும், அங்கு வந்த புகார்தாரரின் தங்கை லெட்சுமி என்பவரையும் 1வது எதிரி அடித்து கீழே தள்ளிவிட்டதாகவும் புகார்தாரருக்கு இடது கை தோள்பட்டையில் வீக்க காயமும் உதட்டில் இரத்த காயமும் அவரது மனைவியான தமிழ்செல்விக்கு தலை மற்றும் நெற்றியில் இரத்த காயமும், இடது உள்ளங்கையில் இரத்த காயமும் புகார்தாரரின் தங்கை லெட்சுமிக்கு இடதுபக்க நெற்றியில் இரத்தக்காயமும் ஏற்பட்டிருந்த நிலையில் அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்து வந்தபோது மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று சம்மட்டிவிடுதி காவல் நிலைய உதவி ஆய்வாளர் மருத்துவமனை

சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த புகார்தாரரை விசாரித்து அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் பெற்றதாகவும், அதனடிப்படையில் இ.த.ச.பிரிவுகள் 294பி, 323, 324 மற்றும் 307ன் படி அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும், சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும் சான்றாவணங்களை பரிசீலித்ததிலிருந்தும் புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று தெரியவந்ததால் வழக்கின் சட்டப்பிரிவை 294பி, 323, 326 மற்றும் 307 இ.த.ச.வாக மாற்றம் செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

**3)** ஆலங்குடி, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்கள் இவ்வழக்கின் கோப்புகளை ஆராய்ந்து முதல்நிலை பதிவு வழக்கு எண்.13/2023 என கோப்பிற்கு எடுத்து எதிரிகளை ஆஜராக உத்தரவிட்டு, எதிரிகள் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு வழக்கு நகல்களை வழங்கி, முதல் நிலை விசாரணை மேற்கொண்டு கு.வி.மு.ச.பிரிவு 209–ன் கீழ் மாண்பமை புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிட்டுள்ளார். மாண்பமை புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் இவ்வழக்கினை கோப்புக்கு எடுத்து இந்நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு அனுப்பியுள்ளது.

**4)** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால், எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி), 325, 326 மற்றும் 307ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டினை மறுத்தார்கள். எதிரிகள் குற்றச்சாட்டினை மறுத்த காரணத்தால் அரசு தரப்பு சாட்சிகளின்

விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

**5)** இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகளும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1 சான்றுபொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6)** **அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

**6.1)** **அ.சா.5.திரு.சரவணன்,** தனது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சியில் சிறப்பு நுண்ணறிவு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், 24.02.2022 தேதியில் சம்மட்டிவிடுதி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த தங்கராசு என்பவரை விசாரித்து அவரிடம் வாக்குமூலம் பெற்றதாகவும், தன்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் மேற்படி தங்கராசு கொடுத்த புகார் வாக்குமூலம் என்றும், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 என்றும், அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலையம் வந்து சம்மட்டிவிடுதி காவல் நிலைய குற்ற எண்.29/2022 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 307ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல்

ஆய்வாளர் முன்னிலையில் சமர்ப்பித்ததாகவும், இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) **அ.சா.6.திருமதி.காருண்யா,** தனது சாட்சியத்தில், தான் தற்போது புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 23.02.2022 தேதியில் இரவு 9.35 மணியளவில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தான் பணியில் இருந்தபோது வாராப்பூரை சேர்ந்த தங்கராசு த/பெ.மாணிக்கவேலர் என்பவர் தன்னிடம் சிகிச்சைக்காக வந்தார் என்றும், அவரை பரிசோதித்ததில் அவருக்கு இடது தோள்பட்டையில் அசைவு குறைவாக இருந்தது என்றும், கீழ்உதட்டில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது என்றும், மேற்படி நபரை உள்நோயாளியாக அனுமதித்து எலும்பு மருத்துவரின் பரிசோதனைக்காக அனுப்பி வைத்ததாகவும், அவருக்கு இடதுபக்க தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்ததால் அந்த காயம் கொடுமையான காயம் என்று காயச்சான்றிதழ் வழங்கியதாகவும், மேற்படி தங்க்ராசு என்பவருக்கு தான் வழங்கிய விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், மேற்படி தங்கராசு என்பவருக்கு தான் வழங்கிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.5 என்றும், மேற்படி அதேநாள் அதே நேரத்தில் மாணிக்கவேலர் மகள் லட்சுமி என்பவர் அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்களுக்காக தன்னிடம் சிகிச்சைக்கு வந்தார் என்றும், அவரை பரிசோதித்ததில் அவருடைய இடது நெற்றியில் ஒரு கிழிந்த காயமும், இடதுதோள்பட்டையில் ஒரு சிராய்ப்பு காயமும் இருந்தது என்றும், மேற்படி

காயங்கள் சாதாரண காயங்கள் என்று தான் சான்று வழங்கியதாகவும், மேற்படி லட்சுமி என்பவருக்கு தான் வழங்கிய விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.6 என்றும், மேற்படி லட்சுமி என்பவருக்கு தான் வழங்கிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 என்றும், மேற்படி அதேநாள் அதே நேரத்தில் தங்கராசு மனைவி தமிழ்செல்வி என்பவர் அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்களுக்காக தன்னிடம் சிகிச்சைக்கு வந்தார் என்றும், அவரை பரிசோதித்ததில் அவருடைய நெற்றில் சிராய்ப்பு காயமும், இடது உள்ளங்கையில் சிராய்ப்பு காயமும் இருந்தது என்றும், மேற்படி தமிழ்செல்வி என்பவருக்கு தான் வழங்கிய விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.8 என்றும், அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் சாதாரண காயம் என்றும், 23.02.2022 தேதியில் இரவு 9.00 மணியளவில் தெரிந்த ஒரு ஆண் நபர் இரும்பு கம்பியால் மேற்படி 3 நபர்களையும் தாக்கியதாக கூறிதான் தன்னிடம் சிகிச்சைக்கு வந்தார்கள் என்றும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.3) அ.சா.7.திருமதி.ஹேமலதா,** தனது சாட்சியத்தில், தற்போது பெரம்பலூர் மாவட்டம் மது விலக்கு அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 24.02.2022 தேதியில் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது சம்மட்டிவிடுதி காவல் நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளராக பணியில் இருந்ததாகவும், சம்மட்டிவிடுதி காவல் நிலைய உதவி ஆய்வாளர் சரவணன் என்பவர் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை

பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற தங்கராசு என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று சம்மட்டிவிடுதி காவல்நிலைய குற்ற எண். 29/2022 இதச பிரிவுகள் 294பி, 323, 324, 307 ன்படி வழக்கு பதிவு செய்து வைத்திருந்ததை தன்னுடைய மேல் விசாரணைக்காக வைத்தார் என்றும், தான் இந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாஸ்கர், பாலாஜி ஆகியோர் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்ததாகவும், தான் தயார் செய்த பார்வைமகஜர் அ.சா.ஆ.9 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 என்றும், சம்பவ இடத்திலேயே அதே சாட்சிகள் முன்னிலையில் மரத்தாலான 63 செ.மீ நீளமுள்ள கைப்பிடியுடன் கூடிய இரும்பு மண்வெட்டி ஒன்றையும், கம்பு ஒன்றையும் கைப்பற்றியதாகவும், தான் கைப்பற்றிய மண்வெட்டிக்காக கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளதாகவும், அது அ.சா.ஆ.11 என்றும், அந்த மண்வெட்டி சா.பொ.1 என்றும், அதன்பிறகு வழக்கு கோப்பை ஆலங்குடி வட்ட காவல் ஆய்வாளர் திருமதி.அழகம்மை அவர்களிடம் ஒப்படைத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.4) அ.சா.7.திருமதி.அழகம்மை,** தனது சாட்சியத்தில், தான் தற்போது கோட்டை பட்டிணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிசெய்து வருவதாகவும், கடந்த 24.02.2022ம் தேதியில் நான் ஆலங்குடி வட்ட காவல் ஆய்வாளராக பணி செய்த போது உதவி ஆய்வாளர் சரவணன் என்பவர் தங்கராஜ் என்பவரிடம் புகார் பெற்று சம்மட்டி விடுதி காவல் நிலைய குற்ற எண் 29/2022 இதச பிரிவுகள்

294பி, 323, 324, 307 ன் கீழ் பதிவு செய்து வைத்திருந்த வழக்கை திருமதி.ஹேமலதா என்பவர் முதல் புலன் விசாரணை செய்து வழக்கு கோப்பை தனது புலன் விசாரணைக்கு ஒப்படைத்தார் என்றும், தான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாஸ்கர், பாலாஜி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் வரைபடம் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்ததை ஒப்பிட்டு பார்த்ததில் ஒன்று போல் இருந்ததால் தனியாக தான் பார்வை மகசர், வரைபடம் தயார் செய்யவில்லை என்றும், மேலும் உள்நோயாளியாக புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த தங்கராஜ்,தமிழ்ச்செல்வி, பாஸ்கர், பாலாஜி மற்றும் லெட்சுமி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்கு மூலம் பதிவு செய்ததாகவும், சம்பவ இட சாட்சிகளான நீலா, ராஜாங்கம், முத்துக்குமார், பாக்கியராஜ் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேலும் இவ்வழக்கின் எதிரிகள் முன்பிணை பெற்றதால் தான் அவர்களை கைது செய்யவில்லை என்றும், மேலும் காயம் பட்ட தங்கராஜ், தமிழ்ச்செல்வி, லெட்சுமி ஆகியோர்க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் காருண்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து காயச்சான்றுகள் பெற்றதாகவும், மேலும் தங்கராஜ் என்பவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையானது கொடுங்காயம் என்பதால் வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 294பி, 323, 326, 307 மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்ததாகவும், தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேற்படி பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

7) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313–ன் படி எதிரிகளிடம் கேள்வி எழுப்பியதில் அவைகள் பொய் சாட்சியம் என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் எடுத்துரைத்ததால் எதிரிகள் தரப்பு சாட்சியம் இல்லை என்று முடிக்கப்பட்டு, இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**8) இந்நிலையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்.**

இவ்வழக்கின் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294பி, 323, 326 மற்றும் 307ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

9) **தீர்வு.**

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட புகார்தாரரான தங்கராசு என்பவரும் எதிரிகளும் அருகருகே குடியிருந்து வருகிறார்கள். மேற்படியார்களின் வீட்டிற்கு செல்லும் பாதை சம்பந்தமாக இருதரப்பினருக்கும் பிரச்சினை இருந்து வந்ததாகவும், அதனடிப்படையிலேயே சம்பவ தேதியில் இரவு சுமார் 09.30 மணியளவில் மேற்படி பாதையில் 1வது எதிரி இருசக்கர வாகனத்தை நிறுத்தி வைத்திருந்ததின் அடிப்படையில் அவரிடம் வாகனத்தை எடுக்கச்சொல்லி புகார்தாரர் கேட்டபோது, புகார்தாரரை இந்த வழக்கின் 2வது எதிரி அசிங்கமாக பேசியதாகவும், அங்கு வந்த புகார்தாரரின் தங்கையை 1வது எதிரி அசிங்கமாக பேசி கீழே தள்ளியதாகவும் கூறி அரசு தரப்பில் 1,2 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச.பிரிவு 294பி–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அ.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள புகார்தாரர் தங்கராசு என்பவர் தம்முடைய போலீஸ் விசாரணையின் போது சம்பவ தேதியில் 1,2 எதிரிகள் அ.சா.1 சாட்சியின்

தங்கை லெட்சுமியை அசிங்கமாக பேசியதாக வாக்குமூலம் அளித்திருந்தபோதிலும் அ.சா.1 சாட்சி தம்முடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது சம்பவ சமயத்தில் 1,2 எதிரிகள், அ.சா.1 சாட்சியையோ அல்லது அ.சா.3 சாட்சியையோ அசிங்கமாக பேசியதாக சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. அந்த சங்கதி குறித்து அ.சா.2 முதல் அ.சா.4 சாட்சிகளும் அரசு தரப்பு வழக்கை ஆதரித்து சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. சம்பவ சமயத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.3 சாட்சிகளை அசிங்கமாக பேசியதாக சொல்லும் சங்கதி குறித்து அரசுதரப்பு சாட்சிகள் எவரும் சாட்சியம் அளித்திருக்காத காரணத்தினால் இந்த வழக்கின் எதிரிகளை இ.த.ச.பிரிவு 294பி–ன் கீழ் குற்றம் சாட்டி தண்டிக்க இயலாது என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10)** வழக்கு சம்பவத்தின்போது 2வது எதிரி, அ.சா.1 சாட்சியை கீழே தள்ளிவிட்டதில் அவருக்கு இடதுபக்க தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டும் அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகளை 1வது எதிரி அவர் கையில் வைத்திருந்த மண்வெட்டியின் பின்புறத்தால் தாக்கி கீழே தள்ளிவிட்டதில் அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகளுக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டும் அ.சா.2 சாட்சியை, 1வது எதிரி மண்வெட்டியால் தாக்கும்போது 'எப்ப பார்த்தாலும் உங்களுக்கு இதே வேலையா போச்சு இத்தோடு செத்து ஒழிங்கடி' என்று கூறிக்கொண்டு கொலை செய்யும் நோக்கத்துடன் தாக்கியதாகவும் கூறி 1,2 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 323, 326 மற்றும் 307ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்தபோதிலும் பாதிக்கப்பட்ட நபர்களான அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தங்களுடைய நீதிமன்ற முதல் விசாரணையின் எந்தவொரு இடத்திலும் 1வது எதிரி, அ.சா.2 சாட்சியை பார்த்து கொலை செய்யும் நோக்கத்துடன் மண்வெட்டியால் தாக்கியதாகவோ 2வது எதிரி, அ.சா.1 சாட்சியை

கீழே தள்ளிவிட்டதில்தான் அவருக்கு இடதுபக்க தோள்பட்டையில் எலும்புமுறிவு ஏற்பட்டு கொடுங்காயம் ஏற்பட்டதாகவோ 1வது எதிரி, அ.சா.3 சாட்சியை கீழே தள்ளியதில் அவருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டதாகவோ சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. மாறாக, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தங்களுடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது அவர்கள் அனைவரும் நடந்துபோகும்போது தடுமாறி கீழே விழுந்ததில்தான் தங்களுக்கு காயம் ஏற்பட்டதாக அரசுதரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் அரசுதரப்பு வழக்கை ஆதரித்து அமைந்திருக்காததால் மேற்படி நபர்கள் அரசுதரப்பில் பிறழ்சாட்சிகளாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் குறுக்கு விசாரணை சாட்சியங்களிலிருந்தும் அரசுதரப்பு வழக்கு மெய்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**11)** இந்த வழக்கு சம்பவத்தின்போது அருகிலிருந்து சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீஸ் விசாரணையின்போது வாக்குமூலம் அளித்துள்ள அ.சா.4 தனிநபர் சாட்சியும் தம்முடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் என்ன பிரச்சினை என்று தமக்கு தெரியாது என்றும் வழக்கு சம்பவம் எதையும் தான் பார்க்கவில்லை என்றும் அரசுதரப்பு வழக்கிற்கு விரோதமாகவே சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 சாட்சியின் மேற்படியான சாட்சியத்திலிருந்தும் அரசுதரப்பு வழக்கு மெய்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**12)** இந்த வழக்கில் முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளரான அ.சா.7 சாட்சி தம்முடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட இரும்பு மண்வெட்டி ஒன்றையும், கம்பு ஒன்றையும் கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், இந்த வழக்கில் அவர் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் கம்பால் பாதிக்கப்பட்ட நபர்கள் யாரும் தாக்கப்பட்டதாக அறிந்துகொள்ளமுடியவில்லை. அதனால், அ.சா.7ன் மேற்படி சாட்சியம் மிகைப்படுத்தப்பட்ட சாட்சியமாகவே இருந்து காணப்படுகிறது. அதேபோல், 24.02.2022 தேதியில் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகளின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்ததாக அரசுதரப்பு வழக்கு அமைந்திருந்தபோதிலும் அ.சா.ஆ.9 பார்வை மகஜர் ஆவணத்தை பரிசீலிக்கும்போது அந்த ஆவணம் 25.02.2022 தேதியில் தயார் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபற்றி அ.சா.7 சாட்சியிடம் எதிரிதரப்பில் விளக்கம் கோரும்போது தேதி தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதாக அ.சா.7 சாட்சி மேலோட்டமாக சாட்சியமளித்துள்ளார். மேற்படி முரண்பட்ட காரணங்களினால் அரசுதரப்பில் எடுத்துரைத்திருப்பதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனால், எதிரிகளை இ.த.ச.பிரிவு 323, 326 மற்றும் 307ன் படியும் குற்றம் சாட்டி தண்டிக்க இயலாது என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13)** மேற்படி காரணங்களின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக வழக்கு குற்றச்சாட்டு அரசுதரப்பில் போதுமான அளவில் மெய்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் எதிரிகளை வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்க வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14)** ஆகவே இதன் முடிவில், இந்த வழக்கின் எதிரிகளுக்கு எதிராக இ.த.ச.பிரிவுகள் 294பி, 323, 326 மற்றும் 307ன் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, எதிரிகளை

கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சா.பொ.1 சான்றுபொருளை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழித்துவிட உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 24ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K S PAULPANDIAN
Digitally signed by K S PAULPANDIAN
Date: 2026.06.24 18:49:05 +0530

**தலைமை குற்றவியல் நீதிபதி,**
**புதுக்கோட்டை.**

**அரசு தரப்பு சாட்சிகள்.**

| | |
|---|---|
| அ.சா.1. | திரு.தங்கராஜ் |
| அ.சா.2. | திருமதி.தமிழ்செல்வி |
| அ.சா.3. | திருமதி.லட்சுமி |
| அ.சா.4. | திரு.ராஜாங்கம் |
| அ.சா.5. | திரு.சரவணன் |
| அ.சா.6. | திருமதி.காருண்யா, |
| அ.சா.7. | திருமதி.ஹேமலதா, |
| அ.சா.8. | திருமதி.வி.அழகம்மை, |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்.**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகாரிலுள்ள கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3. | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4. | விபத்து பதிவேடு (தங்கராசு) |
| அ.சா.ஆ.5. | காயச்சான்று (தங்கராசு) |
| அ.சா.ஆ.6 | விபத்து பதிவேடு (லட்சுமி) |

| | |
|---|---|
| அ.சா.ஆ.7 | காயச்சான்று (லட்சுமி) |
| அ.சா.ஆ.8 | விபத்து பதிவேடு (தமிழ்செல்வி) |
| அ.சா.ஆ.9 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.10 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.11 | கைப்பற்றுதல் மகஜர் |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள்.**

| | |
|---|---|
| சா.பொ.1 | மரத்தால் ஆன சுமார் 63 செ.மீ. நீளமுள்ள கைப்பிடி35 செ.மீ நீளமும், 26 செ.மீ அகலமும் கொண்ட இரும்பு மண்வெட்டி–1. |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் :**

இல்லை.

K S PAULPANDIAN
Digitally signed by K S PAULPANDIAN
Date: 2026.06.24 18:49:14 +0530

**தலைமை குற்றவியல் நீதிபதி,**
**புதுக்கோட்டை.**